# BSNLEU & NFTE-BSNL

## தமிழ் மாநிலம்

### ERP அமலாக்கம்

ERP என்கிற நிறுவன வள ஒருங்கிணைப்பு திட்டம் BSNL-ல் மாநிலங்கள் வாரியாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. மகாராஸ்ட்ரா, ஆந்திரா, கர்நாடகா போன்ற பெரிய மாநிலங்களில் அமலாக்கத்தின் போது ஏற்பட்ட பல்வேறு இடர்பாடுகள் குறித்து செப்டம்பர் 25 அன்று நடைபெற்ற தேசிய கவுன்சிலில் ஊழியர் தரப்பு சுட்டிக்காட்டி விவாதித்தது. நேர் செய்திட வேண்டிய பட்டியலையும் நிர்வாகத்திடம் கொடுத்தது.

தற்போது தமிழகத்தில் "ERP GO LIVE" என்பதற்கான நாள் நவம்பர் 14 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அனைத்து பணப் பட்டுவாடாக்களும் நவம்பர் 1 முதல் (BLOCK OUT) நிறுத்தப்படும். தற்போது நாள் குறிப்பிட்டுள்ள நிலையில், ஒரு நாள் அவகாசத்தில் PGM (F) தலைமையில் கணக்கு அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் சந்திப்பிற்கு அவசர அழைப்பு தரப்பட்டது. இக்கூட்டம் அக்டோபர் 24 காலையில் தலைமைப் பொது மேலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. நவம்பர் ஊதியம் ERP முறையில் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், GPF பட்டுவாடா நவம்பர் மாதத்திற்கு இருக்காது என நிர்வாக தரப்பில் தெரிவிக்கப்பட்டது. LIC, RD, தொழிற் சங்க சந்தா, மன மகிழ் மன்றம், தொழில் வரி, வருமானவரி போன்றவை கூட பிடித்தம் செய்வதில் பிரச்சனை உள்ளது என நிர்வாக தரப்பு தெரிவித்தது.

தொழிற்சங்க தலைவர்கள் அனைவரும் பல்வேறு மாநில அனுபவங்களை எடுத்துச் சொல்லி பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வருவதை சுட்டிக் காட்டினர். விவாதத்திற்குப் பின்னர் LIC பிடித்தம் பரிசீலிக்கப்படும் எனவும், தொழிற்சங்கங்கள் அனைத்து மாவட்டங்களின் வங்கி விவரங்களை கொடுத்தால் அனைத்து மட்டங்களுக்கும் அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் மன மகிழ் மன்றத்திற்கு சந்தா பிடித்து அனுப்புவது குறித்து மேலும் விவாதித்து முடிவு எடுக்கப்படும்.

நவம்பர் 1-ல் பட்டுவாடாவை நிறுத்தாமல் (BLOCK OUT) நவம்பர் 5-ல் பட்டுவாடா நிறுத்தப்பட்டால் GPFஐ வழங்கமுடியும் என்ற ஆலோசனையை நிர்வாகத்திடம் கூறியுள்ளோம். அக்டோபர் மாதத்தில் GPF பெறாதவர்கள் உடனடியாக விண்ணப்பித்தால் GPF உடனடியாக வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மருத்துவ பில் பட்டுவாடாவும் நிறுத்தப்படுவதால், Emergency முன்பணம் மட்டுமே சாத்தியம் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

''ERP GO LIVE" ஐ ஒரு மாதம் தள்ளி வைத்து பிரச்சனைகளைக் குறைத்து அமலாக்க அனைத்து சங்கங்களின் சார்பாக கடிதமும் மாநில நிர்வாகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ERP திட்டம் அமலாகி சரியாவதற்கு சில மாதங்கள் ஆகலாம் என்பதே அனுபவமாக உள்ளது.

இது போன்ற மிக முக்கியமான பிரச்சனைகளைத் தொழிற்சங்கத்துடன் அவசர கதியில் விவாதிப்பது சரியில்லை என்று மாநில நிர்வாகத்திடம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**A.பாபுராதாகிருஷ்ணன்**
மாநிலச்செயலர், BSNLEU

**R.பட்டாபிராமன்**
மாநிலச்செயலர், NFTE

24.10.2014